2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதிச் சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 21/2022)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

The Tamil Nadu Document Writers' Welfare Fund Act, 2022

(Tamil Nadu Act No. 21 of 2022)

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதிச் சட்டம்
(தமிழ்நாடு சட்ட எண் 21/2022)

பிரிவு பொருளடக்கம்

1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.

2. பொருள்வரையறைகள்.

3. பத்திர எழுத்தர்களின் நல நிதி.

4. பத்திர எழுத்தர்களின் நலநிதிக் குழுவை நிறுவுதல்.

5. குழுவின் நியமன உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்தல் மற்றும் நீக்குதல்.

6. குழுவின் நியமன உறுப்பினர்கள் பதவி விலகுதல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புதல்.

7. குறைபாடு முதலானவற்றினால் குழுவின் செயல் எதுவும் செல்லதகாதது ஆகாது.

8. நிதி ஒப்படைப்பும் பயன்பாடும்.

9. நிதியை நிருவகித்தல்.

10. குழுவின் செயற்பணிகளின் ஒப்படைவு.

11. கணக்குகள் மற்றும் தணிக்கை.

12. செயலாளரின் அதிகாரங்களும் கடமைகளும்.

13. குழுவின் கூட்டங்கள்.

14. குழு உறுப்பினர்களுக்கான பயணப்படியும் நாள்படியும்.

15. மறுஆய்வு.

16. சாட்சிகளை அழைப்பதற்கும் சாட்சியம் எடுப்பதற்கும் அதிகாரம்.

17. பத்திர எழுத்தர்கள் சங்கத்தின் அங்கீகாரமும் பதிவும்.

18. பத்திர எழுத்தர் சங்கத்தின் கடமைகள்.

19. நிதியின் உறுப்பினர் தகுதி.

20. உறுப்பினர் தகுதி அற்றுப்போதல்.

21. உறுப்பினர் தகுதியின் அற்றுப்போதலின் போது ஓய்வூதியம் கொடுத்தல்.

22. நிதியின் உறுப்பினர் உரிமை நலனின் உடைமை மாற்றம், பற்றுகை போன்றவற்றிற்கான கட்டுப்பாடு.

23. இணைப்புப்பட்டியலைத் திருத்துவதற்கான அதிகாரம்.

24. நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

25. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதிச் சட்டம்

தமிழ்நாடு சட்ட எண் 21/2022

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2022ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

மாநிலத்தில் பத்திர எழுத்தர்களின் பயனுக்காக நலநிதி ஒன்றை அமைத்துருவாக்குவதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:—

1. **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**— (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதிச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடும் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**— இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(a) "குழு" என்பது, பிரிவு 4இன்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதிக் குழு எனப் பொருள்படும்;

(b) "சார்ந்து வாழ்பவர்" என்பது, இறந்த நிதியின் உறுப்பினர் ஒருவரின் பின்வரும் உறவினர்கள் எவரேனும், அதாவது:—

(i) விதவை அல்லது மனைவியை இழந்தவர், உரிய வயதுவராத மகன், திருமணமாகாத மகள் அல்லது விதவைத் தாய்;

(ii) உறுப்பினர் இறந்தபோது, அவ்வுறுப்பினரின் வருமானங்களை முழுமையாகச் சார்ந்து வாழ்ந்து வந்த, செயல்திறனற்ற பதினெட்டு வயதை

அடைந்துள்ள மகன் அல்லது திருமணமான மகள் ஆகியோர் எனப் பொருள்படும்;

(c) "பத்திர எழுத்தர்" என்பது, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் உரிம விதிகளின்படி உரிமம் வழங்கப்பட்ட நபர் ஒருவர் எனப் பொருள்படும்;

(d) "பத்திர எழுத்தர்கள் சங்கம்" என்பது, பிரிவு 17இன்படி அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு பெற்ற பத்திர எழுத்தர்கள் சங்கம் எனப் பொருள்படும்;

(e) "நிதி" என்பது, பிரிவு 3இன்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நலநிதி எனப் பொருள்படும்;

(f) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) "நிதியின் உறுப்பினர்' என்பது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நிதியின் உறுப்பினராக நீடிக்கின்ற, நிதியின் பலன்களைப் பெற சேர்க்கப்பட்ட பத்திர எழுத்தர் ஒருவர் எனப் பொருள்படும்;

(h) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(i) "மாநிலம்" என்பது, தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்.

3. பத்திர எழுத்தர்களின் நல நிதி.– (1) அரசானது, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நல நிதி என அழைக்கப்பெறும் நிதி ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்,–

(a) பிரிவு 19இன்படி நிதிக்குழு உறுப்பினராக ஒருவரைச் சேர்ப்பதற்கான பத்திர எழுத்தர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகைகள் அனைத்தும்;

(b) 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மையச் சட்டம் XVI/1908) கீழ் பதிவிற்காக சார்பதிவாளர் அலுவலகம் எதிலும் முன்வைக்கப்பட்ட ஆவணத்தின்படி வகுத்துரைக்கபடும் ஐம்பது ரூபாய்க்கு மிகாத வீதத்தில் வசூலிக்கப்படும் தொகை அனைத்தும்;

வரம்புரை: 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2017) பிரிவு 2இன் (II) கூறில் வரையறுக்கப்பட்டபடி மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பின் பொருட்டு பதிவிற்காக முன் வைக்கப்பட்ட ஆவணம் எதற்கும் இந்தக் கூறானது பொருந்தாது.

4. பத்திர எழுத்தர்களின் நலநிதிக் குழுவை நிறுவுதல்.– (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இதன்பொருட்டு குறிப்பிடப்படும் தேதியன்றும், அது முதற்கொண்டும், தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நல நிதிக் குழு என்கிற பெயரில் குழு ஒன்றினை நிறுவுதல் வேண்டும்.

(2) குழுவானது, தொடர்வழியுரிமையும், பொது இலச்சினை ஒன்றையும் கொண்டுள்ள, சொத்தினை ஈட்டுவதற்கும் வைத்திருப்பதற்கும் உரிமை மாற்றம் செய்வதற்குமான அதிகாரத்துடன்கூடிய ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதன் பெயரினால் வழக்கிடலாம் அல்லது வழக்கிடப்படலாம்.

(3) குழுவானது,–

(a) பதிவுத்துறை தலைவர், பதிவுத்துறை –பதவி வழித் தலைவர்;

(b) கூடுதல் பதிவாளர் (சீட்டு) – பதவிவழிச் செயலாளர்;

(c) நேர்முக உதவியாளர் (சீட்டு) – பதவி வழி பொருளாளர்;

(d) இயக்குநர், பதிவு பயிற்சி நிலையம் – பதவி வழி உறுப்பினர்;

(e) கணக்கு அலுவலர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம் – பதவி வழி உறுப்பினர்;

(f) வகுத்துரைக்கப்படும் முறையில் மற்றும் அதிகாரஅமைப்பால் பத்திர எழுத்தர்களின் சங்கத்திலிருந்து, நியமிக்கப்படக்கூடிய நான்கு உறுப்பினர்கள்,

ஆகியோர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்

(4) உட்பிரிவு (3)இன் (f) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், மூன்றாண்டுகள் காலஅளவிற்கு அல்லது அவர் பத்திர எழுத்தர்களின் சங்கத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் வரையில், இதில் எது முந்தியதோ, அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

5. குழுவின் நியமன உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்தல் மற்றும் நீக்குதல்.– (1) பிரிவு 4இன் உட்பிரிவு (3)இன் (f) கூறின்படி, நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், பின்வரும் காரணங்களால் குழுவின் உறுப்பினராகத் தொடர்வதற்குத் தகுதியற்றவராக ஆக்கப்படுதல் வேண்டும். அவர்,–

(a) மனச்சீர்கேடுற்றவரானால்; அல்லது

(b) நொடித்த நிலையராகத் தீர்ப்பளிக்கப் பட்டவரானால்; அல்லது

(c) குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கும் அதிகமாக குழுவின் அனுமதியின்றி வராது இருந்தால்:

வரம்புரை: இந்தக் கூறின்படி, பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர், தாம் வராமையை பிழைபொறுக்கக் கோரி விண்ணப்பம் அளித்தால் அத்தகைய உறுப்பினர் குழுவினால் மீண்டும் பதவியில் அமர்த்தப்படலாம்; அல்லது

(d) நிதிக்கு பணம் செலுத்தத் தவறியவர் அல்லது குழுவிற்கு நம்பிக்கைக்கேட்டை செய்திருப்பார் என்றால்; அல்லது

(e) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்குகின்ற குற்றம் எதற்காகவும், குற்றவியல் நீதிமன்றத்தினால் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பார் என்றால்

(2) அரசானது, உட்பிரிவு (1)இன்படி தகுதியற்றவர் அல்லது தகுதியற்றவராகி உள்ள உறுப்பினர் எவரையும் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கலாம்:

வரம்புரை: அவரது தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றை வழங்கினால் அன்றி, உறுப்பினர் எவரையும் நீக்குவதற்கான ஆணை வழங்கப்படுதல் கூடாது.

6. குழுவின் நியமன உறுப்பினர்கள் பதவி விலகுதல் மற்றும் தற்காலிக காலியிடங்கள் நிரப்புதல்.– (1) பிரிவு 4இன் உட்பிரிவு (3)இன் (f) கூறின்படி நியமனம் செய்யப்படும் உறுப்பினர் எவரும், குழுவின் தலைவருக்கு எழுத்து வடிவில் மூன்று மாத கால அறிவிப்பினை வழங்கி மற்றும் அத்தகைய பதவி விலகல் அந்தத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படுவதன் பேரில், அவர் பதவி விலகியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவியில் ஏற்படும் தற்காலிக காலியிடம் இயன்ற விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய காலியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் அவரது பதவியில் முன்பு இருந்தவரின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு பதவியில் இருப்பார்.

7. குறைபாடு முதலானவற்றினால் குழுவின் செயல் எதுவும் செல்லதகாதது ஆகாது.–குழுவினால் இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படியோ செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும்,–

(a) குழுவில் உள்ள காலியிடம் அல்லது அமைப்பில் உள்ள ஏதாவது குறைபாடு; அல்லது

(b) அதன் நபர் ஒருவரை உறுப்பினராக நியமித்ததில் உள்ள ஏதேனும் குறைபாடு அல்லது முறைகேடு; அல்லது

(c) நிகழ்வின் தகுதிகளைப் பாதிக்காத ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கையிலுள்ள குறைபாடு அல்லது முறைகேடு,

போன்ற காரணத்தினால் மட்டுமே செல்லதகாதது ஆகாது.

8. **நிதி ஒப்படைப்பும் பயன்பாடும்**.– நிதியானது அரசிடம் இருத்தலும் அவற்றால் வைத்துவரப்படுதலும் வேண்டும். அரசானது, நிதியிலிருந்து ஆண்டு ஒன்றிற்கு இருமுறை, வகுத்துரைக்கப்படும் முறையில் குழுவிற்கு தொகைகளை வழங்குதல் வேண்டும். குழுவானது, அத்தகைய தொகைகளை இச்சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு மற்றும் அதன் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் வேண்டும்.

9. **நிதியை நிருவகித்தல்**.– (1) குழுவினால், நிதி நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதி நிருவாகத்தில், குழுவானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் அதன்கீழ் செய்யப்படும் விதிகளுக்கும் உட்பட்டு,–

(a) நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான அல்லது மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பங்களை, மாவட்ட பதிவாளர் (நிருவாகம்) மூலம் பெற்றுக்கொண்டு, அவற்றைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அத்தகைய விண்ணப்பங்களை தீர்வு செய்தல் வேண்டும்;

(b) நிதியிலிருந்து பணம் வழங்கப்படுவதற்காக, நிகழ்விற்கேற்ப, நிதியின் உறுப்பினர்கள், அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து விண்ணப்பங்களைப்

பெற்றுக்கொண்டு, தான் தேவையெனக் கருதுகின்ற விசாரணையை நடத்தி அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் அவற்றை தீர்வு செய்தல் வேண்டும்;

(c) விண்ணப்பங்களின் மீதான தமது முடிவுகளைக் குழுவின் நடவடிக்கைக் குறிப்பேட்டில் பதிவு செய்தல் வேண்டும்;

(d) குழுவானது, வகுத்துரைக்கபடும் உரிய சரிபார்த்தலுக்குப் பிறகு, பின்வரும் பலன்களை வழங்குதல் வேண்டும் மற்றும் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில், பின்வருவனவற்றிற்காக நிதி இருப்பிற்குட்பட்டு தொகையினை செலுத்துதல் வேண்டும்—

(i) நிதியின் உறுப்பினரின் விபத்து கால மரணபலன் அல்லது நிரந்தர உடற்குறைபாடு அல்லது பிற பகுதி உடற்குறைபாடு பலன்;

(ii) நிதியின் உறுப்பினரின் இயற்கை மரண பலன்;

(iii) உறுப்பினரின் திருமணம் அல்லது அவரது மகன் அல்லது மகளின் திருமணத்திற்கு திருமண உதவி;

(iv) நிதியின் பெண் உறுப்பினருக்கு மகப்பேறு பலன்;

(v) நிதியின் உறுப்பினருக்கான மூக்குக் கண்ணாடி பலன்;

(vi) நிதியின் உறுப்பினரின் குழந்தைகளுக்கான கல்விப் பலன்;

(vii) நிதியின் முன்னாள் உறுப்பினருக்கான ஓய்வூதிய பலன்; மற்றும்

(viii) நிதியின் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது அவரது வாழ்க்கை துணைவருக்கு ஈமச்சடங்கு உதவி.

(e) வகுத்துரைக்கப்படும் காலமுறை இதழ்கள் மற்றும் ஆண்டறிக்கைகளை குழுவானது அரசுக்கு அனுப்புதல் வேண்டும்;

(f) நிதியில் இணைய அல்லது மீண்டும் இணைவதற்கான விண்ணப்பங்கள் அல்லது நிதி நலன் உரிமைக்கோரிக்கைகள் தொடர்பாக குழுவின் முடிவுகளைப் பதிவஞ்சலின் மூலம் அந்த விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும்; மற்றும்

(g) இந்தச் சட்டத்தின்படி மற்றும் அதன்கீழ் செய்யப்படும் விதிகளின்படி செய்யத் தேவையான அல்லது தேவைப்படக்கூடிய பிற செயல்களைச் செய்தல் வேண்டும்.

10. குழுவின் செயற்பணிகளின் ஒப்படைவு.– குழுவானது, அரசின் முன் ஒப்புதலுடன், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி, அது தேவையெனக் கருதும் அதன் செயற்பணிகளை, அது பொருத்தமெனக் கருதும் கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதியின் திறன்மிகு மேலாண்மைக்காக, தலைவர் அல்லது செயலாளருக்கு ஒப்படைவு செய்யலாம்.

11. கணக்குகள் மற்றும் தணிக்கை.– (1) குழுவானது, வகுத்துரைக்கப்படும் கணக்குகள் மற்றும் புத்தகங்களைப் பேணி வருதல் வேண்டும்.

(2) குழுவின் கணக்குகள், குழுவினால் பணியமர்த்தப்பட்ட பட்டயக் கணக்கர் ஒருவரால் ஆண்டு தோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) பட்டயக் கணக்கரால் சான்றளிக்கப்பட்ட கணக்குகள், அதன்மீதான தணிக்கை அறிக்கையுடன் இணைந்து அந்நிதியாண்டின் இறுதியிலிருந்து ஆறு மாத காலஅளவிற்குள் குழுவின் செயலாளரால் அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அரசானது, தணிக்கையாளரின் அறிக்கையினை ஆய்வு செய்ததன் பேரில், அது பொருத்தம்

எனக் கருதி வழங்கும் அத்தகைய பணிப்புரைகளை குழுவானது நிறைவேற்றுதல் வேண்டும்;

12. செயலாளரின் அதிகாரங்களும் கடமைகளும்.–

குழுவின் செயலாளர்,–

(a) குழுவின் தலைமைச் செயல் அலுவலராக இருத்தல் மற்றும் அதன் முடிவுகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்;

(b) குழுவிற்காகவும், எதிராகவும் அனைத்து உரிமை வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும் குழுவினை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்;

(c) குழுவின் முடிவுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் அனைத்திற்கும் தம் கையொப்பம் மூலமாகச் சான்றளிக்க வேண்டும்;

(d) குழுவின் வங்கிக் கணக்குகளைப் பொருளாளருடன் சேர்ந்து கூட்டாக இயக்குதல் வேண்டும்;

(e) குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதோடு அதன் நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரித்தலும் வேண்டும்;

(f) குழுவின் கூட்டங்களுக்குத் தேவையான எல்லா பதிவேடுகளுடனும் தகவலுடனும் வருகை தருதல் வேண்டும்;

(g) அவ்வப்போது வகுத்துரைக்கப்படும் படிவங்கள், பதிவேடுகள் மற்றும் பிற பதிவுறுகள் ஆகியவற்றைப் பேணி வருவதோடு குழு தொடர்புடைய கடிதத் தொடர்பு அனைத்தையும் செய்து வருதலும் வேண்டும்;

(h) ஒவ்வொரு நிதியாண்டின் போதும், குழுவினால் நடத்தப்பட்ட அலுவல் பரிமாற்றங்களின் ஆண்டு விவர அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்; மற்றும்

(i) குழுவினால் பணிக்கப்படக்கூடிய அத்தகைய பிற செயல்களைச் செய்தல் வேண்டும்.

13. குழுவின் கூட்டங்கள்.– (1) குழுவானது, அதன் அலுவலை நடத்துவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவை என்று கருதினால் அதற்கும் அதிகமாகக் கூடுதல் வேண்டும்.

(2) குழுவின் ஐந்து உறுப்பினர்கள், குழுவின் கூட்டம் ஒன்றுக்கான குறைவெண் வரம்பெல்லையாக அமைதல் வேண்டும்.

(3) தலைவர் அல்லது அவர் வருகை தாராத நிலையில், கூட்டத்திற்கு வருகை தந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர், குழுவின் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(4) குழுவின் கூட்டம் ஒன்றில் முன்வைக்கப்படும் விவரம் எதுவும், அக்கூட்டத்தில் வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வாக்குகள் சமமாக அமைகின்ற நிகழ்வில், தலைவர் அல்லது அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கின்றவர் அறுதிவாக்கு ஒன்றை அளித்தல் வேண்டும்.

14. குழு உறுப்பினர்களுக்கான பயணப்படியும் நாள் படியும்.– குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படும் பயணப்படியும் நாள்படியும் பெறுவதற்குத் தகுதியுடைவர்களாக இருப்பார்கள்.

15. மறுஆய்வு. – குழுவானது, எந்நேரத்திலும் தானாக முன்வந்து அல்லது சம்பந்தப்பட்ட நபர் எவரிடமிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அதனால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், அத்தகைய ஆணை எதனையும் மறுஆய்வு செய்யலாம்:

வரம்புரை: குழுவானது, பாதிக்கப்பட்ட நபர் எவருக்கும் அவரது தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பொன்றை

அளித்தாலன்றி, அத்தகைய நபருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பாதிக்கின்ற ஆணை எதையும் பிறப்பித்தல் கூடாது.

16. சாட்சிகளை அழைப்பதற்கும் சாட்சியம் எடுப்பதற்கும் அதிகாரம்.– குழுவானது, இந்தச் சட்டத்தின்படி ஏதேனும் விசாரணையின் நோக்கங்களுக்காக, 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) படி உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்கையில், உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதே அதிகாரங்களைப் பின்வரும் விவரங்களைப் பொறுத்துப் பெற்றிருத்தல் வேண்டும், அதாவது:–

(a) நபர் எவரும் முன்னிலையாவதை வலியுறுத்துதல் அல்லது ஆணையுறுதியின் பேரில் விசாரணை செய்தல்;

(b) ஆவணங்களை வெளிக்கொண்டுவர மற்றும் தாக்கல் செய்யக் கோருதல்;

(c) ஆணையுறுதி ஆவணத்தின் பேரில் சாட்சியம் பெறுதல்; மற்றும்

(d) சாட்சிகளை விசாரணை செய்வதற்காக ஆணையர் ஆணை பிறப்பித்தல்.

17. பத்திர எழுத்தர்கள் சங்கத்தின் அங்கீகாரமும் பதிவும்.– (1) (a) மாவட்டம் எதிலும் செயல்பட்டுவரும் பத்திர எழுத்தர்கள் சங்கங்கள் அனைத்திலும், குழுவினால் இதன்பொருட்டு அறிவிக்கை செய்யப்பட வேண்டிய தேதிக்கு முன்னர்; மற்றும்

(b) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் அமைத்துருவாக்கப்பட்ட பத்திர எழுத்தர்கள் சங்கம்,

வகுத்துரைக்கப்படும் முறையில் மற்றும் படிவத்தில் இந்தச் சட்டத்தின்படி பத்திர எழுத்தர்கள் சங்கம் என அங்கீகரிப்பதற்காக மற்றும் பதிவு செய்வதற்காக குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அங்கீகாரத்திற்கான மற்றும் பதிவிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், சங்கத்தின் விதிகள் அல்லது துணைவிதிகள், சங்கத்தில் பதவி வகிப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் உறுப்பினர்களின் பெயர், முகவரி, வயது மற்றும் வழக்கமாகப் பணிபுரியும் இடம் ஆகியவற்றைக் கொண்டுள்ள உறுப்பினர்களின் நாளதுதேதி வரையிலான பட்டியல் ஆகியவற்றுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) குழுவானது, அவசியமெனக் கருதுகின்ற விசாரணையைச் செய்தபின்பு, பத்திர எழுத்தர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கலாம் மற்றும் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அங்கீகாரம் மற்றும் பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம்.

(4) சங்கத்தின் அங்கீகாரம் மற்றும் பதிவு தொடர்பான குழுவின் முடிவே இறுதியானதாக இருக்க வேண்டும்.

18. பத்திர எழுத்தர்கள் சங்கத்தின் கடமைகள்.– (1) பத்திர எழுத்தர்கள் சங்கம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு ஆண்டின், ஏப்ரல் 15ஆம் நாளன்றோ அல்லது முன்போ அந்த ஆண்டின் மார்ச் 31ஆம் நாளன்று உள்ளவாறு அதன் உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றைக் குழுவிற்குத் தெரிவித்தல் வேண்டும்,–

(2) பத்திர எழுத்தர்கள் சங்கம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றை குழுவிற்குத் தெரிவித்தல் வேண்டும்.–

(a) பத்திர எழுத்தர்கள் சங்கத்தின் பதவி வகிப்பவர்களில் ஏற்பட்ட மாற்றம் எதையும் அத்தகைய மாற்றத்திலிருந்து பதினைந்து நாட்களுக்குள்;

(b) சேர்த்தல் மற்றும் மீண்டும் சேர்த்தல் உள்ளிட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மாற்றம் எதனையும் பற்றி அத்தகைய மாற்றத்திலிருந்து முப்பது நாட்களுக்குள்;

(c) அதன் உறுப்பினர் எவரொருவரின் இறப்பு அல்லது ஓய்வு குறித்து அவை நிகழ்ந்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்; மற்றும்

(d) அவ்வப்போது, குழுவினால் கோரப்படக்கூடிய அத்தகைய பிற விவரங்கள்.

19. நிதியின் உறுப்பினர் தகுதி.– (1) பத்திர எழுத்தர் ஒவ்வொருவரும், நிதியின் உறுப்பினர் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பம் ஒன்றைப் பெற்றதன்பேரில், குழுவானது, அது பொருத்தமெனக் கருதுகின்ற விசாரணையைச் செய்தல் வேண்டும் மற்றும் அவ்விண்ணப்பதாரரை நிதியில் சேர்த்துக்கொள்ளலாம் அல்லது எழுத்துவடிவில் காரணங்களைப் பதிவு செய்து அவ்விண்ணப்பத்தை மறுக்கலாம்:

வரம்புரை: விண்ணப்பம் ஒன்றை மறுக்கும் ஆணை எதுவும், விண்ணப்பதாரருக்கு அவரது தரப்பை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்றினை அளித்தாலன்றி பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(3) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும், சேர்ப்பு மற்றும் மறுசேர்ப்பின் போது நிதிக்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) விண்ணப்பக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(4) நிதியின் ஒவ்வொரு உறுப்பினரும், சேர்க்கையின்போது, தாம் இறக்கும் நிகழ்வில், அந்நிதியிலிருந்து தொகையினைப் பெறுவதற்கான உரிமையை அளிக்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சார்ந்திருப்போரை பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்தல் வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்டால், நியமிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் செலுத்த வேண்டிய பங்குத் தொகையானது, அந்த நியமனத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(5) நிதியின் உறுப்பினர் ஒருவர், எந்த நேரத்திலும், குழுவிற்கு புதிய நியமனத்துடன் எழுத்துப்பூர்வமான அறிவிப்பினை அனுப்புவதன் மூலம் ஒரு நியமனத்தை ரத்து செய்யலாம்.

(6) குழுவானது, பத்திர எழுத்தர் எவரும் தவறாகக் கூறியோ, மோசடியாகவோ அல்லது தகாதச் செல்வாக்கினாலோ நிதியின் உறுப்பினர் பதவியைப் பெற்றுள்ளார் என்ற முறையீட்டின் பேரிலோ அல்லது மற்றபடியோ, நம்புவதற்கான காரணம் இருக்கும்போது, அந்நிதியின் உறுப்பினர் பதவியிலிருந்து அத்தகைய பத்திர எழுத்தர் பெயரை நீக்குவதற்குக் குழு தகுதியுடையதாகும்:

வரம்புரை : இந்த உட்பிரிவின்படி ஆணை எதுவும், அதனால் தீங்கு விளைவிக்கும் வகையில் பாதிக்கப்படக்கூடிய நபருக்கு, தனது முறையீட்டை வழங்குவதற்கான வாய்ப்பு ஒன்றினை அளித்தாலன்றி, பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(7) நிதியின் உறுப்பினர், தன்னுடைய விருப்பத்தின் பேரில், உறுப்பினர் தகுதியில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

20. உறுப்பினர் தகுதியின் அற்றுப்போதல்.– நிதியின் உறுப்பினர் ஒருவர்,–

(i) அவருடைய உறுப்பினர் தகுதியிலிருந்து தன் விருப்பத்தின் பேரில் விலகிக் கொள்வதால்;

(ii) 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் உரிம விதிகளின்படி அவரது உரிமத்தை ஒப்புவிப்பு அல்லது ரத்து செய்வதால்; அல்லது

(iii) குழுவினால் அவரது உறுப்பினர் தகுதி நீக்கம் செய்யப்படுவதால்

நிதியின் உறுப்பினர் பதவி அற்றுப்போதல் வேண்டும்.

21. உறுப்பினர் தகுதி அற்றுப் போதலின் பேரில் ஓய்வூதியம் கொடுத்தல்.– (1) உறுப்பினர் தகுதி நிறுத்தத்தின்பேரில், நிதியிலிருந்து ஓய்வூதியம் அளிப்பதற்கான விண்ணப்பமானது வகுத்துரைக்கப்படும் படிவத்தில் குழுவிற்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி பெறப்பட்ட விண்ணப்பமானது அது தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணைக்கு பின்னர், குழுவால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு நிதியின் உறுப்பினராக உள்ள அல்லது பத்தாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு உறுப்பினராக இருந்து மற்றும் அறுபது வயது நிறைவடைந்துள்ள நபர் எவரும், 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் உரிம விதிகளின்படி வழங்கப்பட்ட உரிமத்தினை ஒப்புவிப்பதன் பேரில், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் நிதியிலிருந்து ஓய்வூதியத்தைப் பெற உரிமையுடையவர் ஆவார்:

வரம்புரை: நிரந்தர உடற்குறைபாடு காரணமாக எந்த நேரத்திலும் நிதியின் உறுப்பினர் பதவி அற்றுப்போன நபர் ஒருவர் ஓய்வூதியம் பெற உரிமையுடையவர் ஆவார்.

(4) 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் உரிம விதிகளின்படி, உரிமம் ரத்து செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அல்லது குழுவினால் நிதியின் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை அற்றவர் ஆவார்.

22. நிதியின் உறுப்பினர் உரிமை நலனின் உடைமை மாற்றம், பற்றுகை போன்றவற்றிற்கான கட்டுப்பாடு.–

(1) நிதியின் உறுப்பினர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது சட்டப்படியான வாரிசுகள் ஆகியோரின், நிதியிலிருந்து தொகை எதையும் பெறுவதற்கான உரிமைநலன் அல்லது உரிமையானது ஒப்படைவு

செய்யப்படுதல், உடைமை மாற்றம் செய்யப்படுதல் அல்லது பிணையமாக வைக்கப்படுதல் கூடாது மற்றும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரஅமைப்பின் தீர்ப்பாணை அல்லது ஆணை எவற்றின் கீழும் பற்றுகை வைக்கப்படுவதற்கு அவற்றைப் பொறுப்பாகுதல் கூடாது.

(2) எந்தவொரு கடன் அளிப்பவரும், நிதியின் உறுப்பினர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது சட்டப்படியான வாரிசுகளின் நிதி அல்லது அதன் உரிமை நலனுக்கு எதிராக வழக்குத் தொடர உரிமை அற்றவர் ஆவார்.

விளக்கம்.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "கடன் அளிப்பவர்" என்பது, அரசு அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள நொடிப்புநிலை தொடர்பான சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அலுவல்முறை சொத்துரிமை மாற்றம் பெற்றவர் அல்லது சொத்தைப் பேணுபவர் ஆகியோரை உள்ளடக்கும்.

23. இணைப்புப்பட்டியலைத் திருத்துவதற்கான அதிகாரம்.– அரசானது, அறிவிக்கை வாயிலாகக் குழுவின் பரிந்துரையின் பேரில் இணைப்புப் பட்டியலைத் திருத்தம் செய்யலாம்.

24. நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.– (1) இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் செய்யப்படும் விதி எதனையும் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதிய செயல் எதற்காகவும் அல்லது எவருக்கு எதிராகவும் உரிமை வழக்குத் தொடரப்படுதல் கூடாது.

(2) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விதியின்படி நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதிய செயல் எதற்காகவும் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கப்படக்கூடிய சேதம் எதற்காகவும், குழு அல்லது அரசுக்கு எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் கூடாது.

25. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.– இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதென அல்லது உகந்ததெனத் தோன்றும் எதையும் செய்யலாம் என அரசு ஆணை ஒன்றை வெளியிடலாம்:

வரம்புரை: ஆனால் அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.

26. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.– (1) அரசானது, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடியவிரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அல்லது அடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவை அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படவோ அல்லது பிறப்பிக்கப்படவோ கூடாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதற்குப்பின் அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப அது செல்திறன் அற்றுப் போதல் வேண்டும்.

எனினும் அத்தகைய மாற்றமோ அல்லது செல்திறன் அற்றுப்போவதோ அந்த விதியின்படியோ அல்லது அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

இணைப்புப்பட்டியல்

[9 (2) மற்றும் 23ஆம் பிரிவுகளைக் காண்க.]

வரிசை எண்	பலன்கள்	தொகை (ரூபாய்)
1.	(a) விபத்துக்கால மரண பலன்.	1,00,000
	(b) நிரந்தர உடற்குறைபாட்டு பலன்.	
	(c) பகுதி உடற்குறைபாட்டு பலன்.	20,000
2.	இயற்கை மரண பலன்.	20,000
3.	திருமண உதவி –	
	(a) ஆண் :–	8,000
	(b) பெண் :–	10,000
4.	மகப்பேறு பலன்.	6,000
5.	மூக்குக்கண்ணாடி பலன்.	1,500
6.	கல்விப் பலன் –	
	(a) இடைநிலைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் படிப்பிற்கான உதவித்தொகை.	1,000

	(b) இடைநிலைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் தேர்ச்சிக்காக.	1,000	
	(c) மேனிலைப் பள்ளி சான்றிதழ் படிப்பிற்கான உதவித்தொகை	1,500 (ஆண்டிற்கு)	
	(d) மேனிலைப் பள்ளி நிறைவுச் சான்றிதழ் தேர்ச்சிக்காக.	1,500	
		விடுதியில் தங்காதோர் (ஆண்டிற்கு)	விடுதியில் தங்கிப் படிப்பவர் (ஆண்டிற்கு)
	(e) தொழிற்பயிற்சி மாணவர்	2,000	2,500
	(f) பட்டயம்	2,000	2,500
	(g) பட்டப்படிப்பு	3,000	3,500
	(h) முதுகலைப் பட்டம் அல்லது தொழிற்கல்விப்– பட்டம் பெற்ற மாணவர்கள்.	10,000 (ஆண்டிற்கு)	
7.	ஓய்வூதியப் பலன்.	1,500 (மாதத்திற்கு)	
8.	ஈமச் சடங்கு உதவி.	5,000	